# திருத்தொண்டர் பெருமை

முனைவர் சுப. திண்ணப்பன்
சிங்கப்பூர்

பெரிய புராணத்திற்குச் சேக்கிழார் இட்ட பெயர் திருத்தொண்டர் புராணம் என்பதாகும். மூல நூல்களாகிய திருத்தொண்டத் தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி ஆகியவற்றினை ஒட்டி எழுந்த பெயராக இது அமைகின்றது. "பண்டை நற்றவத்தால் தோன்றிப் பரமனைப் பக்தி பண்ணும் தொண்டர்களைப்" பாடும் சேக்கிழார் "தொண்டுலகுய்ய வந்த தோன்றல்"; அவர் பாயிரத்திலேயே " அளவிலாத பெருமையராகிய அளவிலா அடியார் புகழ்கூறுகேன் " ( பாயிரம் 5 ) என்றும் " தெரிவரும்பெருமைத் திருத்தொண்டர் " (பாயிரம் 6 ) என்றும் பாடுகின்றார். மேலும், " மதிவளர்சடைமுடி மன்றுளாரை முன் துதி செயும் நாயன்மார் " ( பாயிரம் 4 ) என்றும் " அருளின் நீர்மைத் திருத்தொண்டு " (பாயிரம் 9) என்றும் பாடுவதன் மூலம் திருத்தொண்டர்கள் இறை நம்பிக்கையை முதன்மையாகக் கொண்டவர்கள் என்று முன்னுரையிலேயே சொல்லி விடுகின்றார். நூலினுள்ளும் அவர்கள் சிவனடி மறவாத "சிந்தையர்" என்பதைப் பலமுறை வலியுறுத்தி வருகின்றார். "பாரம் ஈசன் பணி அலதொன்றிலர்" (பெ. பு. 144) என்றும் "பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும் மாதோர்பாகர் மலர்த்தாள் மறப்பிலர்" (பெ. பு. 142) என்றும் திருக்கூட்டத்தின் சிறப்பினைக் கூறுகிறார். இவ்வாறு பொதுவாகக் கூறுவதுடனன்றி ஒவ்வொரு நாயனார் வரலாற்றிலும் அறிமுகப்படுத்தும் போதே அவர்கள் சிவன்பாற் கொண்ட பேரன்பை மறவாது பேசுவார். ஆதலால் சேக்கிழார் பேசும் திருத்தொண்டர்கள், "எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும் மன்னிய சீர்ச்சங்கரன்தாள் மறவாமை" (பெ. பு. 3646) பொருளாகக் கொண்டவர்கள்.

" நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும் மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை
குன்றாத உணர்வுடையார் தொண்டராம் குணமிக்கார் "
(பத்தராய்ப் பணிவார் புராணம்-7)

என்ற பாட்டினால் தொண்டிற்குத்துணைபுரிவது இறைவனை மறவாத இதயம்தான் என்பதை உணர முடிகின்றது. அப்பொழுதுதான் "எப்பொருளும் ஆக்குவான் ஈசனே" எனும் உணர்வுண்டாகும் (பெ. பு. 1974) அதன் விளைவாக, " தன் கடன் அடியேனையும் தாங்குதல், என் கடன் பணிசெய்து கிடப்பதே" (5:20:9) என்று கூறும் நெஞ்சுரம் வருவதற்கு நேரிய வழி காணலாம்.

**அன்பே வேண்டும் ஆன்றோர்:**

தொண்டர்கள் இறைவனிடத்திலே வேண்டுவதெல்லாம் தூய அன்பு ஒன்றே ஆகும். காரணம் அவர்கள் " கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார், ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்" (பெ. பு. 143) எனவே அவர்கள் "கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி வீடும் வேண்டாவிறலினர்" ஆக விளங்குகிறார்கள். அவர்கள், "ஈரஅன்பினர், யாதும் குறைவிலார்" (பெ. பு. 144) ஆதலால் இறைவனிடத்தில் "பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண்டும்" (பெ. பு. 1781) என்றும் "புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என் மனத்தே வழுவாதிருக்க வரம்தரல் வேண்டும் " (4:94:8) என்றும் தான் வேண்டுகிறார்கள். எனவே தான் அவர்கள் செய்யும் தொண்டு தன்னலம் கருதாத தொண்டாக பேச ஒண்ணாப் பெருமை உடையதாக விளங்குகின்றது. அவர்கள் உள்ளம் மாசுமறு வற்றது; ஆசை என்பதையே அறியாதது. எதனையும் தொண்டிற்காகத் தியாகம் செய்யத் தயாராக இருப்பது. இத்தகைய தொண்டர்களின் தன்மையை "வீரம்" என்றல்லவா விளம்புகிறார் சேக்கிழார். இவ்வாறு ஆண்டவனை மறவாத சிந்தையும் அன்பு ஒன்றே அயராது வேண்டும் உள்ளமும் கொண்ட ஆன்றோர்கள் செய்யும் தொண்டு சிறப்புடையது என்று சொல்லவும் வேண்டுமோ?

**குலம் கடந்த நலத்தோர்:**

பாத்திரம் சிவமென்று பணிந்து மாத்திரைப் பொழுதுக்குள் மாதேவன் அருள் பெற்ற தொண்டர்களிடத்தில் கோத்திரமும் குலமும் பார்த்துப் பயனில்லை. சேரமான் பெருமாள், கோச்செங்கணார், நெடுமாறர், கழற்சிங்கர் முதலிய பெருவேந்தர்களும்; மெய்ப்பொருள் நாயனார், நரசிங்க முனையரையர், பெருமிழலைக் குறும்பர் முதலிய குறுநில மன்னர்களும் தொண்டர் வரிசையில் உள்ளனர். சம்பந்தர், சண்டீசர், அப்பூதி அடிகள் முதலிய பன்னிருவர் அந்தணர்; அமர்நீதி நாயனார், இயற்பகையார், கலியர், கலிக்கம்பர் முதலிய அறுவர் வணிகர்; அப்பர் இளையான்குடிமாறர், அரிவாட்டாயர் முதலிய பன்னிருவர் வேளாளர்; சுந்தரர் அவர் பெற்றோர், புகழ்த்துணையார் ஆகியோர் ஆதிசைவர்;தொண்டர்களின் வரிசையில் அன்பின் திருவுருவமான கண்ணப்பர் வேடர்; ஆனாயர் இடையர்: அதிபத்தர் மீனவர்; ஏனாதிநாதர் ஈழவர்;

திருக்குறிப்புத் தொண்டர் வண்ணார்; திருநீலகண்டர் குயவர் திருநாளைப் போவார் ஆதித் திராவிடர்;நேசநாயனார் சாலியர்; நீலகண்ட யாழ்ப்பாணர் பாணர். அவர்கள் பல்வேறு குலங்களையும் சாதிகளையும் சார்ந்திருந்தாலும் கூடப் பணி செய்வதில் -பரமன்தாள் அடைவதில் தன்னிகரற்ற தொண்டர்களாகவே திகழ்கிறார்கள். இவர்கள் வாழ்க்கையிலும் தொண்டுணர்வுதான் முந்தி நிற்கிறது. ஆப்பூதி அடிகளார் அந்தணர். அவர் வேளாளராகிய திருநாவுக்கரசரைக் குருவாகக்கொண்டு வழிபட்டு விருந்தும் படைக்கின்றார். ஆதிசைவராகிய சுந்தரர் கணிகையர் குலத்தவராகிய பரவையாரையும் வேளாளர் குலத்தவராகிய சங்கிலியாரையும் திருமணம் செய்துகொள்கிறார். அந்தணராகிய திருஞான சம்பந்தப் பெருமான் தம்முடன் திருநீலகண்ட யாழ்ப்பாணரை அழைத்துக்கொண்டு நண்பராகக் கூட்டிச் செல்கிறார். திருநீலநக்கர் என்ற அந்தணர் தாம் வீட்டில் வேதிகைக்கு அருகில் திருநீலகண்ட யாழ்ப்பாணருக்குத் தங்க இடம் தருகின்றார். சேரமான் பெருமாள் என்னும் அரசர் உவர் மண்ணேறி வந்த வண்ணானை வணங்கித் தொழுது " திருநீற்றின் வார வேடம் நினைப்பித்தீர் " (பெ. பு3771) என்று பேசுகிறார் என்றால் அவர்களின் தொண்டு நெறிக்கு முன்னே சாதி வேறுபாடு தலைகாட்ட முடியாமல் பின்னோக்கி நிற்பதைத்தானே பார்க்க முடிகிறது.

**காலம்-இடம் கடந்த சான்றோர் :**

பெரிய புராணம் பேசுகின்ற தொண்டர்கள் காலம் கி. பி. 400 முதல் கி. பி. 865 முடிய உள்ள பகுதி என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். (பெரியபுராண ஆராய்ச்சி. மா. இராசமாணிக்கனார். பக். 101) அக்காலத்தே தமிழகத்தில் இருந்த பல்வேறு நாட்டுப் பகுதிகளைச் சேர்ந்த தொண்டர்களை நாம் பெரிய புராணத்தில் பார்க்க முடிகிறது; சேர, சோழ, பாண்டிய நாடுகள், மலைநாடு, நடுநாடு தொண்டை நாடு என்று பல பகுதிகளைச் சேர்ந்த அடியார்கள் உள்ளனர். இதற்குமேல் திருமூலர் வடநாட்டினராக உள்ளார். நேசநாயனார் காம்பிலி நகரத்தைச் சார்ந்தவர். இங்கு பேசப்பெறும் தொண்டர்கள் ஒரு குறிப்பட்ட கால, இடப்பகுதியைச் சார்ந்தவர்கள் என்றாலும் இவர்கள் மட்டும்தான் தொண்டர்கள், மற்ற கால இடப்பகுதியைச் சேர்ந்தவர்கள் தொண்டர்கள் அல்லர்" என்று கருதும் குறுகிய நினைப்புடையவர் அல்லர் சேக்கிழார். " அளவிலாத பெருமையராகிய அளவிலா அடியார்" என்று பாயிரத்திலேயே தொண்டர்கள் எண்ணிக்கை கால இட வரம்பிற்கு அப்பாற்பட்டவர்கள் என்பதைச் சேக்கிழார் விளக்கி விடுகிறார். மேலும் "அப்பாலும் அடிச்சார்ந்தார்" யார் என்பதைச் சேக்கிழார் "மூவேந்தர் தமிழ் வழங்கும் நாட்டுக்கப்பால் முதல்வனார் அடிச் சார்ந்த முறைமையோடும் நாவேய்ந்த திருத்தொண்டத் தொகைகூறும் நற்றொண்டர் காலத்து முன்னும் பின்னும் பூவேய்ந்த நெடுஞ்சடைமேல் அடம்புதும்பை புதிய மதிநதி இதழி பொருந்த வைத்த சேவேந்து வெல்கொடியான் அடிச்சார்ந்தாரும் செப்பிய அப்பாலும் அடிச்சார்ந்தார் தாமே" (பெ. பு. 4174) என்று விளக்கிப் பேசும் போது சேக்கிழார் காட்டும் தொண்டுலகத்தின் பரப்பு நிலத்தினும் பெரியதாக நீரினும் ஆழமுடையதாக வானினும் உயர்ந்ததாக விரிந்து நிற்கும் வகையினைக் காணலாம்.

**தொண்டர் குலப் பெண்டிர்:**

தொண்டர் என்று சொல்லும்போதே ஆடவர் மட்டுமல்லர்: பெண்டிரும் உள்ளனர் என்பதை உணர முடியும். தென்னர்குலப் பழி தீர்த்த தெய்வப் பாவையாகவும் மாசில் புகழ் நெடுமாறன் தனக்குச் சைவ வழித்துணையாகவும் அமைந்த மங்கையர்க்கரசியார், சுந்தரரைப் பயந்த இசை ஞானியார் இருவரும் நாயன்மார்களாகத் திகழும் நல்ல பெண்மணிகள் ஆவர். தம்பியார் உளராக வேண்டும் என்று வைத்த தயாவினால் அனைத்துயிர்க்கும் அருள் தாங்கி அம்பொன்மணி நூல் தாங்காத திலகவதியார்தான் திருத்தொண்டின் நெறிவாழத் திருநாவுக்கரசரைத் தந்த பெண்ணின் நல்லார் என்பதைச் சைவ உலகம் நன்கறியும். இடர்களையாரேனும் எமக்கிரங்காரேனும் படரும் நெறி பணியார் ஆயினும் இடையறாது இறைவனிடத்து அன்பு செலுத்திச் சிவனடியார் வழிபாட்டினால் உய்திபெற்ற காரைக்கால் அம்மையாரையும் நாயனாராகக் கருதிச் சைவர்கள் வழிபடுகின்றனர். இவர்களைத் தவிர இன்னும் எத்தனையோ பெண்மக்கள் தொண்டர்களாகத் திகழும் தங்கள் கணவர்மார்களுக்குத் தக்க துணையாக விளங்கினர். எனவே தொண்டு செய்வதில் பெண்ணுலகும் தலைமை பெற்று விளங்குகிறது.

**குறிக்கோள் நெறியினர்:**

திருத் தொண்டர்கள் இறைவனுக்காவது இறைவன் அடியவர்க்காவது தங்களால் இயன்ற தொண்டு ஒன்றினைச் செய்வதே வாழ்க்கை இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தார்கள். அந்த இலட்சியத்தை நிறைவேற்றும் போதும் ஏதேனும் இடையூறு வருமானால், அதனை எதிர்த்து நின்று வெற்றி பெறுகின்றார்கள். அந்தக் குறிக்கோளுக்காகத் தன்னையோ, தன் மனைவியையோ, தன் மகனையோ, தன் உடைமைகளையோ, தன் உயிரையோ தியாகம் செய்யத் தயாராக இருக்கின்றார்கள். இந்த நிலையில் தான் அவர்கள் செயற்கரிய செயல் செய்த பெரியார்களாகத் திகழ்கின்றார்கள். இந்தத் தொண்டினைச் சேக்கிழார் "கைத்திருத்தொண்டு", "மெய்யடிமைத் தொழில்", "மெய்த் தொண்டு" என்றெல்லாம் பாராட்டுகின்றனர். இவற்றை வகைப்படுத்திச் சிறிது பார்ப்போம்.

**பரமனுக்கேற்ற பல்வகைத் தொண்டுபுரி பான்மையர்:**

இறைவழிபாட்டில் செய்யப் பெறும் பலவகைப் பணிகளும் "தொண்டுகள்" என்றே பேசப் பெறும். அத்தொண்டுகள் பலதிறப்படும். அத்தகைய தொண்டுகளைச் செய்யும் தொண்டர்களும் "நல்ல

நந்தவனப் பணிசெய்பவர், நறுந்துணர்மாலை கொய்வோர், பல்பணித்தொடை புனைபவர். கொணர்ந்திரு மஞ்சனப் பணிக்குள்ளோர், அல்லும் நண்பகலும் திரு அலக்கிட்டுத் திருமெழுக்கமைப்போர்கள், எல்லையில் விளக்கெரிப்பவர், திருமுறை எழுதுவோர், வாசிப்போர். "(பெ. பு3930) முதலிய பலதிறப்படுவர். இவர்களுக்கு எல்லாம் இந்தத் தொண்டுகளைச் செம்மையாகச் செய்வதற்குப் பயிற்சி கொடுக்கின்ற ஆசிரியராகத் தொண்டாற்றினார் கணநாதர். "அலகில் தொண்டருக்கு அறிவு அளித்தவர்" (பெ. பு3931) என்று அவரைச் சேக்கிழார் பாராட்டுகிறார்.

கோயிலில் விளக்கு இடுதலையே தங்கள் வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டவர்கள் மூவர்; ஒருவர் "தொண்டர்க்காணி" என்று நாவுக்கரசரால் பாராட்டப்பெற்ற நமிநந்தி அடிகள்; மற்ற இருவர் கணம்புல்லர், கலியர் என்போர். மூர்த்தி நாயனார் இறைவனுக்குரிய சந்தனம் தேய்த்துக் கொடுத்தலை நியமமாகக் கொண்டார். முருகநாயனார் திருப்புகலூர் இறைவனுக்குரிய மாலைகளைக் கட்டிக்கொடுத்து மகிழ்ந்தார். இறைவனுக்குரிய பூக்குடலையை வீழ்த்திய யானையை வெட்டினார் எறிபத்தர்; கடவுளுக்குரிய பூவை மோந்த காரணத்திற்காக அரசியின் மூக்கரிந்தார் செருத்துணையார்; தன் மனைவியின் கையைத் தடிந்தார் கழற்சிங்கர்; சாக்கியர் கல்லை எறிந்தாலும் அன்பின் திறத்தால் அக்கல் அரனார்க்கு அலராக மலர்ந்தது. திருக்கோயிலில் குங்கிலியப் புகையிட்டார் கலயர்; கோயிலில் உள்ள இசைக் கருவிகளுக்கு ஏற்ற தோலும் வாரும் நரம்பும் கொடுத்தார் திருநாளைப் போவார். இறைவனுக்கு மனத்தால் கோயிலெழுப்பி மகிழ்ந்தனர் பூசலார், வாயிலார் என்ற இருவரும். எழுநிலை மாடங்களையுடைய கோயில் எழுப்பினான் கோச்செங்கட் சோழன்: காரி நாயனார் என்னும் புலவரோ மூவேந்தர் மீது கோவை பாடிப் பொருள் பெற்றுக் கோயில் கட்டினார்; இறைவனுக்குரிய பஞ்சாட்சர மந்திரத்தைக் குழலில் இசைத்து மகிழ்ந்தார் ஆனாயர்; உருத்திர மந்திரத்தைச் செபித்து உயர்கதி பெற்றார் பசுபதியார். தேவாரம் பாடிய மூவரும் காரைக்கால் அம்மையாரும் ஐயடிகள் காடவர்கோனும், சேரமான் பெருமாளும் தலவழிபாட்டினைச் செய்து தமிழ்ப்பாட்டால் இறைவனை ஏத்தி நின்றனர். தமிழில் தத்துவ நூல் செய்து தந்தார் திருமூலர். சம்பந்தரின் திருமுறைப் பாடல்களை யாழில் மீட்டினார் திருநீலகண்ட யாழ்ப்பாணர். இறைவனுக்கு மாவடுவும் இனிய கீரையும் அமுதும் படைத்தார் அரிவாட்டாயர். இறைவனுக்குரிய நெல்லை உண்ட தன் சுற்றத்தினரை அழித்தார் கோட்புலியார். குருடராய் இருந்தும் திருக்குளப் பணியை நிறைவேற்றினார் தண்டியடிகள்; சிவபூசையில் ஈடுபட்டிருந்தபோது அபிடேகத்திற்குரிய பாற்குடத்தை இடறிய தந்தையின் காலைத் தடிந்தார் சண்டீசர். எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனுக்குத் தம் கண்ணையே தந்து நின்றார் கண்ணப்பர்.

**அடியார் தொண்டு செய்த அன்பர்:**

இறைவனுக்குத் தொண்டாற்றிய தொண்டர்களைப் போல் வேறு சிலர் இறைவனடியார்க்கு ஏற்ற தொண்டுகளைச் செய்துள்ளனர். சிவனடியார் திருவேடத்தை மதித்துத் தம்முயிரையும் தியாகம் செய்தவர்கள் மெய்ப்பொருள் நாயனாரும் ஏனாதிநாதரும் ஆவர். அடியார்களுக்குரிய ஆடைகளைக் கொடுத்து மகிழ்ந்தார் அமர்நீதியார். அவற்றைத் துவைத்து மகிழ்ந்தார் திருக்குறிப்புத் தொண்டர். திருவோடு கொடுத்தார் திருநீலகண்டர். அடியார்கள் கேட்கும் பொருள் அனைத்தையும் இல்லையென்னாது கொடுத்து மகிழ்ந்தார் இயற்பகையார்; அவர்தம் குறிப்பறிந்து கொடுத்தார் மானக்கஞ்சாறர்; அல்லற் காலத்தும் அயராது அடியார்க்கு அமுதிட்டார் இளையான்குடிமாறர்; தன் ஒரே மகனையும் அடியார்க்கு அமுதாகப் படைத்தார் சிறுத்தொண்டர். தன் பழைய வேலையாள் அடியாராக வர, அவர்களுக்குப் பணிவிடை செய்யச் சிறிது காலம் தாழ்த்திய தன் மனைவியின் கையைத் தடிந்தார் கலிக்கம்பர். இவ்வாறு அடியார்க்குத் தொண்டு செய்து அரன்கழல் அடைந்தோர் பலர். விறன்மிண்டரும் ஏயர்கோன் கலிக்காமரும் அடியாரின் பெருமையை அகிலம் அறியச் செய்தனர்.

**மூவர் வழிநின்ற முன்னோர்:**

இன்னும் சில தொண்டர் இறைவனடியார்களையே குருவாகக் கொண்டு அவர்கள் நாமமந்திர விசேடத்தால் வீடுபேறு பெற்றுள்ளனர். குறைவிலா நிறை ஞானத் கொண்டலாராகிய திருஞான சம்பந்தரைக் குருவாகக் கொண்டனர் நின்றசீர் நெடுமாறர், மங்கையர்க்கரசியார், குலச்சிறையார், கணநாதர், திருநீலகண்ட யாழ்ப்பாணர் முதலியோர். திருக்கோயிலின் புறத்தே உழவாரப் பணியும் அகத்தே தேவாரப் பாடற் பணியும் செய்து திருத்தொண்டின் உறைப்பாலே "சமணரை வென்ற திருநாவுக்கரசரையே குருவாகக் கொண்டார் அப்பூதி அடிகளார்." "நாளும் நம்பியாருரர் நாமம் நவின்ற நலத்தாலே" உய்தி பெற்று உயர்ந்தார் பெருமிழலைக் குறும்பர்; சோமாசி மாறரும் சுந்தரரைக் குருவாகத் தொழுது வாழ்ந்தவர்.

**இறைவரும் போற்றும் இயல்பினர்:**

சமயக் குரவர்களாகிய சம்பந்தரும் நாவுக்கரசரும் செய்த சமுதாயத் தொண்டுகள் பலப்பலவாகும். திருவீழிமிழலையில் பஞ்சம் வந்து பலர் பட்டினியால் பரிதவித்தபோது அவர்கள் இறைவனிடம் பொற்காசு பெற்று அனைவர்க்கும் அமுதிட்டுதவினர். திருமறைக்காட்டில் மூடியிருந்த திருக்கோயில் கதவைத் திறக்கவும் அடைக்கவும் செய்தனர். பழையாறையில் மண்ணுக்கடியில் மறைக்கப்பட்டிருந்த சிவலிங்கத்தை எடுக்குமாறு செய்ய உண்ணாவிரதம் இருந்தார் திருநாவுக்கரசர். மாதொரு பாகனார்க்கு வழிவழி அடிமை செய்யும் வேதியர் குலத்தினராகிய சுந்தரர் திருத்தொண்டர்களின் பெருமையைத் திருத்தொண்டத் தொகையாகப் பாடி மகிழ்ந்தார்.

அப்போது இறைவன் அவர்க்கு "பெருமையால் தம்மை ஒப்பார், பேணலால் எம்மைப் பெற்றார். ஒருமையால் உலகை வெல்வார், ஊனம்மேல் ஒன்றில்லார் அருமையாம் நிலையில் நின்றார், அன்பினால் இன்பம் ஆர்வார். இருமையும் கடந்து நின்றார்" (பெ. பு. 342) என்ற அறிமுகப்படுத்தியதுடன் "தில்லைவாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று அடியெடுத்துக் கொடுத்தான் என்றால் திருத்தொண்டர் பெருமைக்கு எல்லைதான் ஏது?

**நால்வர் கூறும் நன்னெறி:**

இத்தகைய "தொண்டர் தொண்டரைத் தொழுதடி பணிமின்கள்; தூநெறி எளிதாமே" (2:104:10) என்றும் "வீடும் ஞானமும் வேண்டுதிரேல் விரதங்களால் வாடி ஞானமென்னாவதும்? எந்தை வலஞ்சுழி ஞானசம்பந்தன் செந்தமிழ் கொண்டிசை பாடும் ஞானம் வல்லாரடிசேர்வது ஞானம்"(2:2:11) என்றும் திருஞானசம்பந்தப் பெருமான் கூறுகிறார்; திருநாவுக்கரசரும், "உண்டுகொலோ பொய்யன்பிலா அடித்தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே"(4:101:9) என்று கேட்டுவிட்டு "அண்டர் வாழ்வும் அமரர் இருக்கையும் கண்டு வீற்றிருக்கும் கருத்தொன்றிலோம்; வண்டுசேர் மயிலாடுதுறையரன், தொண்டர் பாதங்கள் சூழத் துதையிலே"(5-39-3) என்று கூறுகிறார். சுந்தரரும் "ஆலங்காடா! உன் அடியார்க்கு அடியேன் ஆவேனே"(7:52) என்று ஒரு பதிக முழுதும் வேண்டுகிறார். மணிவாசகர் "அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்"(திருவாசகம்: கோயில் மூத்த திருப்பதிகம்-1) என்று பொன்னம்பலத்தானிடம் கேட்பதை நாம் அறிவோம். சாத்திர நூல்களும் தொண்டு நெறியை நம் ஆன்ம முன்னேற்றத்திற்குரிய முதற் படியாகக் கூறுவதுடன் முடிந்த நிலையாகிய சீவன் முத்தர் நிலையிலும் வேண்டப்படுகின்ற ஒன்றாகவே வலியுறுத்துகின்றன. எனவே தொண்டர் அல்லது அடியார் வழிபாடு நம் சமய வாழ்வில் இன்றியமையாத ஒன்று என்பது புலனாகும். தொண்டர் வழிபாடு என்பது எவ்வாறு செய்யப்பெற வேண்டும்? திருத்தொண்டரின் பெருமையை உணர்ந்து அவர்களைப் போல அயராது ஆண்டவன் திருவருளை வேண்டுவதும், அனைத்துயிர்களிடத்தும் அன்பு காட்டுவதும், ஏதேனும் நமக்கேற்ற ஒரு இனிய தொண்டினை வாழ்க்கை இலட்சியமாகக் கொண்டு எதுவரினும் தளராது அதை நிறைவேற்ற முயல்வதும்தான் உண்மையான திருத்தொண்டர் வழிபாடாகும். அவ்வழிபாட்டினைச் செய்து உய்தி பெறுவோமாக!

"தொண்டலால் துணையுமில்லை

மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே."

